**கவனிக்க.-** *2016.05.13 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1968 - 2016 මැයි මස 20 වැනි සිකුරාදා - 2016.05.20**

*1968 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |

| | பக்கம் |
|---|---|
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 122 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** *அக்குறணை பைதுஸ் ஸகாத் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, யூன் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, மே மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ.ஏ.ஏ.ஜீ.பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/46311.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : இகொ/இ/19/தீ.ப/ஹிக்/256.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

காலி மாவட்டம், ஹிக்கடுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 58, வவுலகொட கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஹிக்கடுவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் மு.பி.கா 3817 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.2537 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு 153/பீ, எஸ். எச். தஹநாயக்க மாவத்தை, காலி என்ற முகவரியிலுள்ள ருஹுணு சுற்றுலா பயணிகள் பணியகம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப் படுகின்றது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு: மு.பி.கா. 1095 இல் காணித்துண்டு இலக்கம் 03;
கிழக்கு: மு.பி.கா. 3644 இல் காணித்துண்டு இலக்கம் 350 மற்றும் புகையிரத ஒதுக்கு;
தெற்கு: ஷெல்டன் விஜேரத்ன பிடித்துள்ள கரதகஹவத்த மற்றும் கொரவ் ரிப் ஹோட்டல் பிடித்துள்ள கிஸ்டின்கேவத்த;
மேற்கு: கொரல் ரிப் ஹோட்டல் பிடித்துள்ள கிஸ்டின்கேவத்த.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2016.04.05ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி)

**வருடாந்தக் குத்தகை.**- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2016ஆம் ஆண்டிற்கான வர்த்தகப் பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த 5 வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50% க்கு அதிகமாகாமல் இருத்தல் வேண்டும்;

தவணைப் பணம்.- வருடாந்தக் குத்தகையின் மும்மடங்கு தொகை தவணைப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தைக் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2016.04.05 ஆம் திகதி தொடக்கம் 5 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் கீழ் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக் கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்கு தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

நுவனி சுதுசிங்க,
பிரதிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயத்தின் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ராஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2016, மே 06.

5- 684

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/44434.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : PLC/ LC/ KULI/ L.T/ 02.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

குருநாகல் மாவட்டம், குளியாப்பிட்டிய மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வெவகம கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வெவகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் மு.பி.கு. 945 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 137 எனக் காட்டப்பட்டுள்ளதும் 16.5 பேர்ச்சு விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு வெவகம பிரதேச மற்றும் கிராமிய வங்கி குளியாப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் வ- து விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத் தரப்படுகின்றது.

2.விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு: மேலதிக காணித்துண்டு;
கிழக்கு: மேலதிக காணித்துண்டு;
தெற்கு: மு.பி.கு. 945 இல் காணித்துண்டு 138;
மேற்கு: மு.பி.கு. 945 இல் காணித்துண்டு 71.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் ( 2016.04.05ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி)

**வருடாந்தக் குத்தகை.**- பிரதம மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்கான வர்த்தகப் பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த 5 வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50% க்கு குறையாமல் இருத்தல் வேண்டும்;

தவணைப் பணம்.- வருடாந்தக் குத்தகையின் மும்மடங்கு தொகை தவணைப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தைக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2016.04.05 ஆம் திகதி தொடக்கம் 5 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் கீழ்க் குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்கு தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டீ. ரீ. எம். ஜயதிலக்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயத்தின் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2016, மே 03.

5- 685